


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.12.2024) தலைமைச் செயலகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழ் இயங்கும் 35 ஆரம்ப நிலை இடையீட்டு மையங்களை மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் மூலம் வலுப்படுத்தி "விழுதுகள் ஒருங்கிணைந்த சேவை மையங்களாக அறிவித்தார். இந்த நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் திருமதி. சிஜி தாமஸ் வைத்யன், மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் ஆர். சுதன், , (ஓய்வு), மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இயக்குநர் திருமதி. எம். லக்ஷ்மி, , மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.12.2024) முகாம் அலுவலகத்தில், நாடாளு மன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் தனது பிறந்தநாளையொட்டி, சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான நிர்வாகக் குழுவின் இரண்டாவது கூட்டம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, டிச. 7 -

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (5.12.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான நிர்வாக குழுவின் இரண்டாவது கூட்டம் நடைபெற்றது.**

இக்கூட்டத்தினை வரவேற்புரை வழங்கி தொடங்கி வைத்த சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் முதன்மைச் செயலாளர் அவர்கள், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ள இயக்கங்களான, பசுமைத் தமிழ்நாடு இயக்கம், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம், தமிழ்நாடு ஈரநில இயக்கம் மற்றும் தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம் ஆகியவற்றின் வாயிலாக தமிழ்நாட்டில் காலநிலை மீள்திறனை உருவாக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து விரிவாக விளக்கினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் முதலமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில், மாநில மற்றும் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கங்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்கவும், அரசின் அனைத்துப் பணிகளும் தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் குறிக்கோள்களுடன் இணைந்து அமைவதை உறுதிசெய்வதும் தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான நிர்வாகக் குழுவின் கடமையாகும் என்றும், தனது தலைமையிலான இந்தக் குழுதான், இந்தியாவிலேயே காலநிலை மாற்றத்திற்காக அமைக்கப்பட்ட முதல் நிர்வாகக் குழு ஆகும் என்றும், அந்த வகையில், தமிழ்நாடு, இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாக அமைந்திருக்கிறது என்றும் தெரிவித்தார்.

காலநிலை மாற்றம் இன்று மனித சமுதாயம் எதிர்கொண்டிருக்கும் பெரும் சவால் எனவும், அதனை எதிர்கொள்ள அரசு பல்வேறு துறைகள் மூலம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்தும் கூறினார். மேலும், வெப்ப அலையின் பாதிப்புகள் குறித்து கூறுகையில், தமிழ்நாடு அரசு வெப்ப அலையினைப் பேரிடராக அறிவித்து அரசிதழில் வெளியிட்டுள்ளதையும், வெப்ப அலையினை எதிர்கொள்ள மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மாநில பேரிடர் மேலாண்மை நிதியினை பயன்படுத்திக்கொள்ள வழிவகை செய்திருப்பதையும் குறிப்பிட்டிருந்தார். மேலும், நிர்வாகக் குழுவினரைக் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கிடுமாறு வலியுறுத்திய முதலமைச்சர் அவர்கள், நம் எதிர்கால சந்ததியினருக்கு இயற்கை கேடுகள் விளைவிக்காத உலகத்தை கொடுப்பதற்கான திட்டங்களை நம் வாழ்நாளில் முன்னெடுத்து அதில் வெற்றி பெற்றோம் என வரலாறு போற்றும் வகையில் தமிழ்நாட்டை உலக அரங்கில் காலநிலை மீள்திறன் மற்றும் நீடித்த நிலைத்த வளர்ச்சியில் மற்ற மாநிலங்களுக்கும், நாடுகளுக்கும் முன்னோடியாக மாற்றிக் காட்ட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

பொருளாதார நிபுணரும், நிர்வாகக் குழு உறுப்பினருமான மாண்டெக் சிங் அலுவாலியா கூறுகையில், அடுத்த கான்ஃபெரன்ஸ் ஆஃப் பார்ட்டீஸ்30 மாநாட்டிற்குள் 2025 - 2035 ஆண்டிற்குள் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள திடமான குறிக்கோள்களைக் கொண்டுள்ள நாடுகளுடன் ஒருங்கிணைவுகளை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும், தமிழ்நாட்டின் காலநிலை செயல்திட்டம் துறைசார்ந்த குறிக்கோள்களுடன் உருவாக்கப்பட்டு வருவதையும் பாராட்டிப் பேசினார்.

ஐ.நா. அமைப்பின் சுற்றுச்சுழல் திட்டத்தின் முன்னாள், பொது சார்பு செயலாளரும், தமிழ்நாடு கால நிலை மாற்ற நிர்வாகக் குழுவின் உறுப்பினருமான எரிக் சொல்ஹைம் அவர்கள் உரையாற்றுகையில், வெற்றிகரமாக தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்பட்டு வரும் இந்த நான்கு இயக்கங்கள் குறித்து வாழ்த்து தெரிவித்தார். கரிமச்சந்தையின் மீது தமிழ்நாடு கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும், கடலோர சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மீளுருவா க்கத்தின் அவசியம் குறித்தும், தமிழ்நாட்டின் நீண்ட நெடிய கடற்கரையில் கடல் காற்றாலை மின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழிவகைகளை ஆய்வு செய்யவும் வலி யுறுத்தினார்.

இன்ஃபோசிஸ் இணை நிறுவனரும், நிர்வாகக் குழுவின் உறுப்பினருமான நந்தன் நிலகேனி அவர்கள், காணொலி வாயிலாக உரையாற்றுகையில், கரிம வணிகம் மூலம் பெறக்கூடிய வருவாயினை நம் நாட்டில் பரவியிருக்கும் அயல் தாவர ரகங்களின் ஒழிப்பிற்கும், வனப்பரப்பினை அதிகரிக்கவும் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென தெரிவித்தார். தமிழ்நாடு, பிரேசில் நாட்டில் அடுத்து வரும் COP30ல் பங்குபெற்று, மாநிலத்தின் சிறப்பு முயற்சியின் திட்டப்பயன்களை விளக்கலாம் என்றும், அதன் வாயிலாக இத்திட்ட முயற்சிகள் பல நாடுகளுக்கும் பயன்பெறும் என்றும் கூறினார்.

உலக சுகாதார அமைப்பின் முன்னாள் தலைமை விஞ்ஞானி டாக்டர் சவுமியா சுவாமிநாதன் அவர்கள் உரையாற்றுகையில்,

கூல் ரூஃபிங் எனப்படும் கட்டடங்களின் மேற்கூரைகளுக்கு வெள்ளைப் பூச்சுகள் பூசப்படுவதன் மூலம் கட்டடங்களில் அறை வெப்ப நிலை குறைவது ஆய்வுகளில் நிரூபிக்கப்பட்டி ருப்பது குறித்தும், ஒன் ஹெல்த் எனப்படுகின்ற ஒருங்கிணைந்த நலவாழ்வு திட்டத்தின் மூலம் மனிதர்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழ லின் நலங்களைப் பேண திட்டங்கள் வகுக்க தமிழ்நாடு அரசு நடவடிக்கைகைகள் மேற்கொண்டு வருவதைப் பாராட்டியும் பேசினார். சுற்றுச்சூழல் ஆரோக்கியம் குறித்தும் அதனை நெறிமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தினார்.

பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளரும், நிர்வாகக் குழுவின் உறுப்பினருமான சுந்தர்ராஜன் அவர்கள் பேசுகையில், தமிழ்நாட்டில் அறிவொளி இயக்கம் மூலம் எவ்வாறு கல்வியறிவு சதவிகிதம் அதிகரிக்கப்பட்டதோ, அது போல் காலநிலைக் கல்வியறிவினை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும், மற்ற நிர்வாகக்குழு உறுப்பினர்களான நீடித்த கடலோர மேலாண்மைக்கான தேசிய மையத்தின் நிறுவன இயக்குநர் ரமேஷ் ராமச்சந்திரன், அவர்கள், அண்ணா பல்கலைக்கழகத்தின் காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மைக்கான மையத்தின் முன்னாள் இயக்குநர் பேராசிரியர். ஆ. ராமச்சந்திரன் அவர்கள் மற்றும் ராம்கோ சமூக சேவைகள் அமைப்பின் தலைவர் திருமதி. நிர்மலா ராஜா ஆகியோரும் அரசின் சீரிய முயற்சிகளை பாராட்டி தங்களது கருத்துக்களை முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில், நிதித்துறை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் முருகானந்தம், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர். பி.செந்தில் குமார், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் ஏ.ஆர். ராகுல் நாத், பொருளியல் அறிஞர் மாண்டேக் சிங் அலுவாலியா, சுற்றுச்சூழல் ஆர்வலர் எரிக் சொல்ஹெய்ம், உலக சுகாதார நிறுவனத்தின் முன்னாள் தலைமை அறிவியலாளர் மருத்துவர் சவுமியா சுவாமிநாதன், நீடித்த கடலோர மேலாண்மைக்கான தேசிய மையத்தின் நிறுவனர் இயக்குநர் பேராசிரியர் ரமேஷ் ராமச்சந்திரன், அண்ணா பல்கலைக்கழகத்தின் காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை மைய முன்னாள் இயக்குநர் முனைவர் ராமச்சந்திரன், பூவுலகின் நண்பர்கள் ஒருங்கிணைப்பாளர் சுந்தர்ராஜன், ராம்கோ சமூக சேவைகள் அமைப்பின் தலைவர் நிர்மலா ராஜா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**கள்ளக்குறிச்சி விஷச் சாராயம் : உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு!**

# மலிவு அரசியல் செய்யும் எடப்பாடி பழனிச்சாமிக்கு கண்டனம்!

## சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

*சென்னை, டிச. 7 -*

கள்ளக்குறிச்சி விஷச்சாராய மரணங்கள் தொடர்பான வழக்கில் விசாரணை வேகமாக நடைபெற்று வருகிறது; பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவான நீதியைப் பெற்றுத் தருவதற்காகவே தமிழ்நாடு அரசு மேல்முறையீட்டு வழக்கை உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்திருக்கிறது சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



கள்ளக்குறிச்சியில் கடந்த ஜூன் மாதம் விஷச் சாராய மரணங்கள் நிகழ்ந்தவுடன் பாதிக்கப்பட்டோருக்கு உடனடியாக நிவாரணம் கிடைக்கவும் நீதி கிடைக்கவும் உத்தரவிட்டார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். அதனடிப்படையில் சிபிசிஐடி போலிசாரால் வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை முடுக்கிவிடப்பட்டுள்ளது; குற்றவாளி கள் உடனடியாக கைது செய்யப்பட்டுள்ளனர். ஒய்வு பெற்ற நீதிபதி கோகுல்தாஸ் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டு அக்குழுவும் விசாரணையை மேற்கொண்டு வருகிறது. கள்ளச்சாராயம் விற்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுக்க தமிழ்நாடு அரசால் சட்டத்திருத்த மசோதாவும் உடனடியாக கொண்டுவரப்பட்டது. காவல்துறையால் இடைக்கால அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றத்தோடு தொடர்புடைய 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்; 17 பேர் குண்டர்சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணை வேகமாக நடைபெற்று இறுதி குற்றப்பத்திரிகைத் தாக்கல் செய்யப்பட இருக்கிறது. இந்நிலையில் சிபிஐ விசாரணைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு வழங்கியிருப்பது வழக்கின் வேகத்தை தாமதப்படுத்தும். சிபிஐ விசாரணையால் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைப்பது மேலும் தாமதமாகும். அதற்கு பல சான்றுகள் உண்டு; பாதிக்கப்பட்டோருக்கு விரைவாக நீதி கிடைக்கவே உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மேல்முறையீடு செய்திருக்கிறது.

பாதிக்கப்பட்டோருக்கு விரைவாக நீதி கிடைப்பதில் அக்கறை இல்லாத பழனிசாமி விஷச்சாராய மரணங்களை வைத்து அருவருக்கத்தக்க அரசியல் செய்து வருகிறார். தன் மீதான ஊழல் குற்றச்சாட்டிற்கு பயந்துபோய் உச்சநீதிமன்றத்தில் சிபிஐ விசாரணை வேண்டாம் என தடை உத்தரவு வாங்கிய பழனிசாமி இன்று சிபிஐ விசாரணை கோருவது கேலிக்கூத்தாக இருக்கிறது. அரசின் மேல் முறையீட்டு முடிவை எதிர்த்து மலிவு அரசியல் செய்யும் பழனிசாமிக்கு வன்மையான கண்டனம்.

இவ்வாறு எஸ்.ரகுபதி பதிவிட்டுள்ளார்.

# தஞ்சாவூர் - விக்கிரவாண்டி தேசிய நெடுஞ்சாலைப் பணியை விரைந்து முடிக்க வேண்டும்!

## ஒன்றிய அமைச்சரிடம் – சு.கல்யாணசுந்தரம் எம்.பி, நேரில் வலியுறுத்தல்!

*தஞ்சாவூர் டிச.7.*

தஞ்சாவூர் - விக்கிரவாண்டி தேசிய நெடுஞ்சாலை பணி கடந்த 9 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெறுவதால் தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு. கல்யாணசுந்தரம் கடந்த ஞாயிறு அன்று சாலை பணிகளை ஆய்வு செய்து டெல்லியில் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை ஒன்றிய அமைச்சரை நேரில் சந்தித்து சாலை பணியை விரைந்து முடிக்க வலியுறுத்தியுள்ளார்.



டெல்லியில் ஒன்றிய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரியை மாநிலங்களவை உறுப்பினர் சு. கல்யாண சுந்தரம் நேரில் சந்தித்தார். இந்த சந்திப்பில் தஞ்சாவூர் விக்கிரவாண்டி தேசிய நெடுஞ்சாலையை ஆய்வு மேற்கொண்ட போது பொதுப்பணித் துறை உயர் அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் அந்த தேசிய நெடுஞ்சாலை பகுதியில் தாங்கள் சந்தித்து வரும் பிரச்சினைகளையும், அதில் உள்ள குறைபாடுகளையும் கூறியுள்ளனர். எனவே இந்த சாலையில் செய்ய வேண்டிய பணிகளை விரைவாக முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். மேலும் தற்போது பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட சாலைப்பணிகளை துரிதப்படுத்தி செயல்படுத்திட வேண்டும் என ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரியை வலியுறுத்தி உள்ளார்.

இதற்கு பதிலளித்த ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி, தற்போது நடைபெற்று வரும் தஞ்சாவூர் விக்கிரவாண்டி தேசிய நெடுஞ்சாலை பணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. அதிகாரிகள் மற்றும் பொதுமக்களின் பிரச்சினைகளையும், குறைகளையும் கண்டறிந்து, அதனை நிவர்த்தி செய்து, பொதுமக்களின் நலன் கருதி மீதமுள்ள பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க வனத்துறை அமைச்சர் முனைவர் .க. பொன்முடி, விழுப்புரம் மாவட்டத்தில் மழையினால் முழுவதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தின் மூலம் திருக்கோவிலூர் வட்டம், மாரங்கியூர், சிறு மதுரை ஆகிய பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கு ரூ.2000 மற்றும் அரிசி, பருப்பு, சர்க்கரை, பொருட்கள் வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் சி.பழனி, மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட துணைச் செயலாளர் தயாஇளந்திரையன், ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஒன்றியக் குழு தலைவர் ஓம்சிவசக்திவேல் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



முதலமைச்சர்,கழக தலைவர்,சமூக நீதி காவலர்,திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர்,கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியம் சேமங்கலம் ஊராட்சியில் பெஞ்சல் புயல் மழையில் சேதமடைந்த வீடுகளையும், தெருக்களையும், விவசாய நிலங்களையும், பொதுமக்களையும், நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் மாலை நேரில் வருகை தந்து பொதுமக்களிடையே குறைகளை கேட்டறிந்து அவர்களுக்கு உணவு மற்றும் ரஸ்க் பாக்கெட் வழங்கினார். இதில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிகண்ணன் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள்,நகர கழக நிர்வாகிகள்,பேரூர் கழக நிர்வாகிகள்,கிளை கழக நிர்வாகிகள் என ஏராளமானோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.